1970 நவம்பர் 26]

திரு. எஸ். இராமச்சந்திரன் : செஞ்சேனை என்ற படை வைத்து அதன் மூலமாகவும் இத்தகைய காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் நக்சல்பாரிகளுக்கும் தொடர்பு இருக்கிறது என்பதை அறிந்து ஆங்காங்குள்ள பொதுமக்கள், தமிழ்ப் பெருமக்கள் அதைக் கண்டிக்கும் வகையில் இத்தகைய ஊர்வலங்களை நடத்துகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படிப்பட்ட தகவல்களும் அரசுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்குத் தையல் தொழில் பயிற்சி

* 3 வினா.—**திரு. பி. எஸ். மணியன்** : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் பாடப் பிரிவில் **(Craft)** ஆண்களுக்கும் தையல் தொழில் கற்றுக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தற்பொழுதுள்ள பாட முறையின்படியே 8, 9 வகுப்புகளில் படித்து வரும் மாணவ மாணவியருக்கு துணைத் தொழிற்பாடமாகத் தையல் தொழில் கற்றுக்கொடுக்க இடமுண்டு. போதுமான எண்ணிக்கையில் மாணவ மாணவியர் தையல் தொழில் கற்றுக்கொள்ள முன்வரும் பள்ளிகளிலெல்லாம் தையல் தொழில் கற்றுக்கொடுக்கலாம்.

திரு. இல. பலராமன் : இந்த மாணவர்களுக்கு அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்கள் என்னென்ன ? அது இந்த மாணவர்களின் வாழ்க்கைக்குப் பயன் அளிக்கிறது என்று அரசு கருதுகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கைத்தொழில்கள் என்ற முறையில்— Drawing, Painting, gardening spinning and weaving, paper work, clay modelling, wood work, needle work, metal work
ஆகியனவும், பிறகு சப்சிடியரி தொழில்கள் என்ற வகையில் எட்டாவது, ஒன்பதாவது படித்தவர்களுக்கு— Tailoring, electric wiring, leather work, book-binding, clay modelling
ஆகியனவும் கற்றுத்தரப்படுகின்றன.

திருச்சிராப்பள்ளியில் பல்கலைக் கழகப் பிரிவு

* 4 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளியில் பல்கலைக்கழகப் பிரிவு (University Centre) ஏற்படுத்தத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த இடத்தில் துவக்க உத்தேசித்துள்ளது ?

[1970 நவம்பர் 26

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) சென்னைப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளியில் கோட்டுப்பட்டு கிராமத்திலிருக்கும் குதிரைப் பந்தய மைதானத்தில் மேற்படிப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. ஆர். கருப்பையா: அந்தப் பிரிவானது எப்போது தொடங் கப்படும்? எந்த ஆண்டு செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னைப் பல்கலைக் கழகம் இதிலே முடிவு எடுத்திருக்கிறது. அதற்கு பல்கலைக் கழகத்தின் மானியக் குழுவிடமிருந்து நிதி உதவி பெற வேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு இந்தப் பல்கலைக்கழகப் பிரிவை அமைக்க மானியக் குழு நிதி உதவி செய்யும். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு முழுப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா என்று அரசின் கருத்தைக் கேட்டார் கள். இந்த அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறது. மானியக் குழுவுக்கு எழுதி பதில் வந்த பிறகு இந்தப் பிரிவு தொடங்கப் பெறும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : மெட்ராஸ் யூனிவர்சிடி திருச் சிராப்பள்ளியில் செண்டர் அமைப்பது போல் மதுரை யூனிவர் சிடியின் செண்டர் ஒன்றைப் பாளையங்கோட்டையில் ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை வந்திருக்கிறதா ? திருநெல்வேலி டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திலும் இதுபற்றி முடிவு எடுக்க பட்டது. இதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக் கிறது ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேள்வி சென்னைப் பல்கலைக்கழகத்தின் பகுதியைப் பொருத்தது. திருநெல்வேலியில் அப்படிப்பட்ட பிரிவு அமைப்பதைப்பற்றி மதுரைப் பல்கலைக் கழகம் முடிவு எடுக்க வேண்டும். தனிக் கேள்வி போட்டால் அப்படிப்பட்ட முடிவை மதுரைப் பல்கலைக்கழகம் எடுத்திருக் கிறதா இல்லையா என்ற விவரத்தைப் பெற்று அளிக்க முடியும்.

THIRU K.S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether he will be kind enough to grant a University Centre at Dharmapuri ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எல்லா இடங்களிலும் பல்கலைக்கழகப் பிரிவை ஏற்படுத்தமாட்டார்கள். சென்னைப் பல் கலைக்கழகப் பிரிவை திருச்சியிலும், கோவையிலும் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஒரு பகுதியில் பல்கலைக் கழகப் பிரிவு ஏற்படுத்தப்பட வேண்டுமென்றால் அங்கு ஏராளமான கல்லூரிகள் அமைந்திருக்க வேண்டும். அந்த வகையில் திருச் சியிலும், கோவையிலும் பல்வேறு கல்லூரிகள் அமைந்திருப்பதால் அங்கே பல்கலைக்கழகப் பிரிவை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்கும்.